# *St Jude's Catholic Church*



***20 Prendiville Way, Langford, Western Australia 6147***

***Parish Phone +61 8 9458 1946***

***www.stjudescatholic.org***

**Catholic Parish of Lynwood, Langford**

**Ferndale & Parkwood** — **Fr. Terry Raj**

parishpriest@stjudescatholic.org — **Parish Priest**


முதலில் எல்லாம் வல்ல இறைவனுக்கும், நமது விண்ணக
மரியாளுக்கும், புனித வளனாருக்கும் நமது பங்கின் பாதுகாவலரான புனித யூதாவுக்கும், நமது பங்கின் தமிழ் மக்களாகிய உங்கள் அனைவருக்கும் எனது சிரம் தாழ்ந்த வணக்கத்தையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அயல்நாட்டில் பல இன மக்களுக்கிடையே வாழுகின்ற தமிழ் மக்களாகிய நீங்கள் நன்கு ஆங்கிலம் தெரிந்திருந்தும் தம் தாய் மொழியாம் தமிழில் திருப்பலி வேண்டும் என்று கேட்டு தமிழில் கொண்டாடி இந்த பெருவிழாவோடு பத்து ஆண்டுகள் நிறைவு பெறுகின்றது.

முதலில் தமிழ் திருப்பலி, படிப்படியாக தமிழில் தியானங்கள், ஆன்மீக, சமூக ஒன்றிணைப்பு கூட்டங்கள் பலவற்றை நடத்தி வெற்றி பெற்றுள்ளோம். இவை அனைத்தையும் நம்மால் தனித்து நின்று நடத்த முடியாத தருணத்தில் வேற்று இடங்களிலிருந்து தமிழ் ஆய்ந்த அருட்பணியாளர்களை அழைத்து நிகழ்வுகளை நடத்தி வெற்றிப் பெற்றுள்ளோம்.

இதற்கு, நம் அருகாமை பங்கில் உள்ள அருட்சகோதரிகளின் வருகையும் ஒத்துழைப்பும் நமக்கு பெரும் உதவியாக இருந்தது என்று சொன்னால் மிகையாகாது.
இந்த பத்தாம் ஆண்டு நிறைவில் நமது இணையதளத்தில் எனது இந்த செய்தியை வெளியிடுவதில் பெரு மகிழ்வு கொள்கிறேன்.

வரும் காலங்களில் எல்லாம் வல்ல இறைவன் நமது தமிழ் மக்களுக்கு அனைத்து நலன்களையும் வழங்க வேண்டுவோமாக!!

பங்கு பாதுகாவலர் யூதாவின் துணையுடன்

யேசுவுக்கு புகழ் கூறும்

பங்கு தந்தை

டெரி ராஜ்